# Chennaiyin Varalatril Thiyakaraya Nagar Thotramum Matrum Valarchiyum

**M. Nadhiya**
*Research Scholar (Part-time)*
*Department of Tamil, Loyola College*

**Dr. D. David Stanley**
*Associate Professor*
*Department of Tamil, Loyola College*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358677

**Abstract**

*All major cities have long market streets. Historically, streets were separately designated for selling specific items like jewelry, furniture, groceries, toys, and clothes. A significant milestone in the development of T. Nagar was the ability to purchase all goods in one place. This led to the growth of consumer culture, and T. Nagar shines as an icon of commercial enterprise. From its inception until today, this area has undergone numerous changes and renovations, which this article describes.*

***Keywords:*** *Formation of T. Nagar, Mambalam Railway Transport, Educational Development, Entertainment, Economic Changes, Education With Culture, Literature And Publishing Growth, Migration.*

**References**

1. Nalli Kuppuswami, T. Nagar Then and Now, Chennai, Kavitha Publications, 2014: (p. 12)
2. Ashokamitran, Chennai City in a Glimpse, Chennai, Kavitha Veliyeedu, 2002: (p. 9)
3. Nalli Kuppuswami, T. Nagar Then and Now, Chennai, Kavitha Publications, 2014: (p. 20)
4. Ibid., (p. 22)
5. Ibid., (p. 23)
6. Ibid., (p. 95)
7. Ma. Su. Sambandan, Chennai Maanagar, Chennai, Malarbooks, 2023
8. Ramachandra Vaidyanath, Chennapattinam: Life and Way, Bharathi Puthakalayam, 2023

# சென்னையின் வரலாற்றில் தியாகராய நகர் தோற்றம் மற்றும் வளர்ச்சி

***முனைவர் ம. நதியா***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை
இலயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை

***முனைவர் டோ.டேவிட் ஸ்டான்லி***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
இலயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*அனைத்து பெரு நகரங்களிலும் நீண்ட கடைத் தெருக்கள் உள்ளன. நகைகளுக்கொரு தெரு, மரச் சாமான்கள், பலசரக்கு, பொம்மைகள், துணிகள் என தனித்தனியாக தெருக்கள் அமைக்கப்பட்டு விற்கப்பட்டன. தி.நகரின் வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கள் அனைத்து பொருட்களையும் ஓரே இடத்தில் வாங்கி விடலாம். இதனால் நுகர்வு கலாச்சாரம் பெருகுகின்றது. வணிக நிறுவனத்தின் அடையாளமாக தி.நகர் மிளிர்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை இப்பகுதி பற்பல மாறுதலுக்கும் புதுப்பித்தலுக்கும் ஆளானது. அதனையே இக்கட்டுரை விவரித்திருக்கிறது.*

***முக்கிய சொற்கள்:*** *தி.நகர் உருவாக்கம், மாம்பலம் ரயில் போக்குவரத்து, கல்வி வளர்ச்சி, பொழுது போக்குகள், பொருளாதார மாற்றங்கள், பண்பாட்டுடன் கல்வி, இலக்கியமும் பதிப்பக வளர்ச்சியும், குடிப்பெயர்தல்.*

**முன்னுரை**

கிராமமாகதோற்றமளித்தபகுதியேதியாகராயநகர்.பெரும்பகுதிஏரிக்கரையாகவயல்வெளிகளாக இருந்தது. இன்றைய சூழலில் தியாகராய நகரை கிராமம் என்று எண்ணிட இயலாத அளவுக்கு அசுர வளர்ச்சியை எட்டியுள்ளது. வணிகமே இப்பகுதியின் முக்கிய சிறப்பாக உள்ளது.

**தி.நகர் உருவாக்கம்**

பிரிட்டிஷ் அரசின் *1920*-ஆம் ஆண்டின் டவுன் பிளானிங் என்னும் துறைத் திட்டத்தின் கீழ் *1923-25*-இல் உருவானது தி.நகர் என்ற தியாகராய நகர். உருவாகும் போது இஃது நகரமாக உருவாகிய கிராமத் தோற்றத்தில் பொலிந்த பகுதி. *1926*-இல் வயல்வெளியாக இருந்தது தி.நகர். லயோலா கல்லூரி வரை நீண்டிருந்தது. சுப்ரமணிய ஐயர் என்ற ஸ்டேஷன் மாஸ்டருக்கு சொந்தமாக *100* ஏக்கர் நிலப்பகுதி தி.நகரும் அதனைச் சுற்றியுள்ள இடமும்.

நிலவரி கட்டுவதில் இலாபமற்ற நிலையில் அப்பொன் விளையும் நிலங்கள் விற்கப்பட்டன. இன்று வயல்வெளிகள் வணிக மதிப்பினை பெற்று விட்டன. மக்களின் தேவைகட்கும், விருப்பத்தின் பேரிலும் நிலங்கள் தம் பழமை அடையாளங்களை இழந்து புதியதொரு பரிமாணங்களை பெற்று விடுகின்றன.

“லேக் வியூ ரோடு” என்றழைக்கப்படும் மேற்கு மாம்பல பகுதியில் பெரிய ஏரி இருந்தது. “லேக் ஏரியா” என்ற நுங்கம்பாக்கம் பகுதி “லாங் டேங்க்’, “லாங் லேக்” என்றெல்லாம் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரி இன்று கட்டிடங்களாக மாற்றம் அடைந்துள்ளது[1].

### அசோகமித்திரன் பார்வையில் தியாகராய நகர்

தியாகராய நகரில் 1948-ல் அசோகமித்திரன் குடியேறிய காலத்தில் தண்ணீர், விறகு முதலியன பற்றாக்குறை இருந்ததாக கூறுகிறார். ரேஷன் கார்டு இருந்துள்ளது. அப்போதே கண்ணம்மாபேட்டை பிணங்களை எரிக்கவும், புதைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தாமோதர ரெட்டித் தெருவில் கரி நரி உலவியதாகவும் கூறப்படுகிறது. 1940-களில் இரங்கநாதன் தெருவில் சிவ - விஷ்ணு ஆலயம் ஒரு கிராமாந்தர கோயில் போல் இருந்துள்ளது எனக் கூறுகிறார். இரயில் கட்டணம் மிகக் குறைவு. பஸ் கட்டணம் கூடுதலாக இருந்துள்ளது. இரயிலில் போக முடியாத இடங்களுக்கு பஸ்களில் பயணம் மேற்கொண்டிருக்கின்றனர். அக்காலத்தில் அத்தெருவில் மூன்றே கடைகள் மட்டுமே இருந்துள்ளது. கல்யாண் ஸ்டோர்ஸ், கும்பகோணம் பாத்திரக் கடை, 4-ஆம் எண் வீட்டையொட்டி ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை. இரயில் பிடிப்பதும், பயணச் சீட்டு எடுப்பதும் அன்று மிக எளிது என்கிறார். அத்தெரு 1990 களில் மாறியுள்ளது. அத்தெருவைக் கடந்து செல்ல பத்திலிருந்து முப்பது நிமிடங்கள் வரை எடுத்துவிடுவதாகவும், இரயில் பிடிப்பதும், மாடிபடி ஏறி பயணச்சீட்டு வாங்குவதும் சிரமம் என்கிறார். அறுபது வருட காலத்தில் தி.நகர் வேகமாக வளர்ந்துள்ளது. கடைகளும் பெருகி விட்டது. 1960-களில் பஸ் நிலையம் இருக்கும் இடத்தில் குளம் இருந்துள்ளது. அதில் நீர் வற்றும் காலங்களில் அரசியல் பொதுக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இராஜாஜி, அண்ணா, செங்கல்வராயன், ம.பொசி, முத்துராமலிங்கத் தேவர், சின்ன அண்ணாமலை போன்றோரின் உரைகளையும், 1960-ல் சுவாமி சின்மயாநந்தாவின் கீதை வேள்வி என்ற உரையையும் அங்கு நிகழ்த்தியுள்ளார். நல்ல ஆங்கில புலமையில் அங்கு உரையாற்றியதாக கூறுகிறார். நல்லி, டி.பி.ஜூவல்லரி, ராமநாதன் கடை, ராமச்சந்திரன் கடை, ராமச்சந்திர ஐயர் கடை, பாண்டி பஜார் மார்க்கெட் போன்றவையும் இருந்துள்ளது.

### மாம்பலம் ரயில் போக்குவரத்து

தி.நகர் உருவாகும் முன்பே இருந்த நிலப்பரப்பு மாம்பலம். எனவே மாம்பலம் ரயில் நிலையம் என்றே பெயரிடப்பட்டது. இதன் கிழக்குப் பகுதி தி.நகர் என்றும் ஏற்கனவே இருந்த இடத்தை மேற்கு மாம்பலம் என்றும் குறிப்பிடப்படுகிறது ஆனால் கிழக்கு மாம்பலம் என்று ஒன்றில்லாதபோது அதனை மாம்பலம் என்று அழைப்பதே உகந்தது. ஆயினும் இன்றளவும் மேற்கு மாம்பலம் என்றே வழங்கப்படுகிறது.

1960-க்கு முன் மாட்லி சாலையையும் துரை சாமி சாலையையும் மேற்கு மாம்பலத்தையும் தி.நகருடன் இணைக்கும் பாதைகளாக ஒன்றாக இருந்தது. இது முற்றிலும் பாதுகாப்பானது. 1960-களில் காண்ட்லீவர் கேட் போட்ட பிறகு மக்கள் இரயில் பாதையை அடிக்கடி கடப்பதும் விபத்துகள் ஏற்படுவது மாய் நிறைய சம்பவங்கள் நிகழ்ந்தன.

### உணவு

தி.நகர் சோஷியல் கிளப் என்று அன்று அதன் காண்டீனுக்கு பிரசித்தமானது அங்கு தஞ்சாவூர் டிகிரி காபி கிடைக்கும். நான்கணா அதாவது இருபத்தைந்து காசுக்கு கள்ளிச்சொட்டுப் போல ஒரு தம்ளர் காபி2 1970-களில் பாண்டிபஜாரில் சாந்திபவன் என்னும் உணவகம் தக்காளி சட்னி என்னும் உணவிற்கு சிறந்ததாக இருந்தது. பின்னர் சரவண பவன் என்னும் உணவகம் அனைத்து சி ற்றுண்டி சாலைகளை பின்தள்ளியது. சாம்பார் வடை, சாம்பார் போன்றன பிரசித்தி பெற்றது. மக்கள் சைவ உணவுகளையும் எளிய வகை உணவுகளையும் உணவகம் சென்று உண்ணும் வழக்கம் இயல்பாக அமைந்திருந்தது.

**மருத்துவம்**

தி.நகரில் இரண்டு மருத்துவர்கள் இருந்துள்ளனர். உடல் நலனில் அக்கறையுடன் இவர்கள் விளங்கினர். அடிபட்டதற்கு மருந்து என களிம்பு ஒன்று தரப்பட்டதாக கூறுகிறார் அசோகமித்தரன். மக்கள் நோய்வாய்படுதல் குறைவாக இருந்த காலகட்டம். நெரிசல், இடப்பற்றாக்குறை, கழிவுநீர் தேக்கம் யாவும் இல்லாத காலமாக இருந்துள்ளது.

**தி.நகர் எல்லை**

தி.நகர் உருவான காலத்தில் மேற்கு எல்லையாக மாம்பலம் ஹைரோடு, கிழக்கு எல்லையாக மவுண்ட் ரோடு, வடக்கு எல்லையாக பசுல்லா ரோடு, தெற்கு எல்லையாக பர்க்கிட் ரோடு என இருந்தது. நகரின் கிழக்குப் பகுதி வளரும் என்பது வழக்கு. ஆனால் தி.நகரின் தெற்கு பகுதி வேகமாக வளர்ந்தது. பேருந்து நிறுத்தம், இரயில் நிலையம், பெரிய, சிறிய கடைகள் என பலவும் மக்களின் வசதிக்கேற்ப பெருகியதே காரணமாகும். பிந்தைய கால கட்டத்தில் உஸ்மான் ரோடு, வடக்கு, தெற்கு எனவும், போக் ரோடு வடக்கு, தெற்கு எனவும் பிரிந்து வளர்ந்தது.

**நிலமதிப்பு உயர்வு**

*1928*-ல் ஒரு ஏக்கர் மனை *2000* ரூபாய் விற்றது. ஐயாயிரம் சதுர அடி கட்டிடம் கட்ட செலவு மூவாயிரம் ரூபாய்.3 *1937*-ல் மூன்று கிரவுண்ட் ஆறாயிரம் ரூபாய் விற்றது. பழங்காலப் பெரிய பங்களாக்கள் இடிக்கப்பட்டு அடுக்குமாடிக் கட்டிடங்களும் புதிய வணிக வளாகங்களும் உருவாகின.

**நடுத்தர குடும்ப வாழ்வியல்**

“வியாபார விஷயமாகக் காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த என் தாத்தா நல்லி சின்னசாமி செட்டியார் மாம்பலம் ரயில் நிலையத்தில் இறங்கி மயிலாப்பூர் பகுதிக்குச் சென்று வியாபாரம் செய்து வந்தார்.’[4]

அக்காலத்தில் நடுத்தர குடும்பத்தினர் நகர்ப்புற பகுதியில் இருந்து கொண்டு நகர்ப் பகுதியில் தம் வியாபாரத்தை மேற்கொண்டு வந்துள்ளனர். இதற்கு இரயில் போக்குவரத்து பெரிதும் பயன்பட்டுள்ளது. இதன்பின் நகரில் நிரந்தரமாக தங்கவே வீடு தேடி வாடகை ஒண்டு குடித்தனம் தனி வீடு அமைத்தல், விடுதியில் தங்குதல் என பலவாறு மக்கள் பிற ஊர்களில் இருந்து நகர்ப் பகுதியில் குடியமர்கின்றனர். நகர் பகுதியின் மக்கள் அடர்த்தி அதிகரிக்கவும் வாழ்வியலில் முன்னேற்றம் அடையவும் வேலை வாய்ப்பும் பொருளாதார நிலைப்புத் தன்மையும் முக்கிய காரணியாக உள்ளது.

சிறிய வீடுகள், பெரிய வீட்டின் ஒரு பகுதியோ தான் அந்தக் காலத்தில் வாடகைக்கு கிடைத்தது. “இரண்டு போர்ஷன்கள் கொண்ட எங்கள் வீட்டில் ஒரே ஒரு சமையல் அறைதான் இருந்தது. ஒரு குடும்பம் சமைத்து முடித்து விட்டுப் போன பின்புதான் இன்னொரு குடும்பம் சமையல் அறையை பயன்படுத்த முடியும்’[5] மக்கள் அன்றாட வாழ்வில் தமக்குள் அனுசரித்து முறைவைத்து சமைத்துக் கொண்டனர்.

**குடிசைப் பகுதிகள்**

அப்போது சேரிகள் என்று உருவாகவில்லை. கண்ணம்மா பேட்டையில் நிறைய குடிசைகள் இருந்தன. ஹபிபுல்லா சாலைப் பகுதியில் ஒரு குடிசைப் பகுதி இருந்தது. தேனாம்பேட்டை திறந்த சாக்கடைப் பகுதியில் ஒரு விஸ்தாரமான குடிசைப்பகுதி அசோகமித்திரன் சென்னை குடிசைப்பகுதியின் பரிணாம வளர்ச்சியான அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்பட்டதை விவரிக்கின்றார். அரசியல் தலைவர்களின் தலைவிதி இங்கு எழுதப்படுவதாக கூறுகிறார்.

**தி.நகரின் ரேடியோ**

தி.நகர் பகுதி சிறியதாக இருந்த கால கட்டத்தில் வானொலி அனைவரின் வீடுகளிலும் இடம்பெறவில்லை. தொலைபேசி வசதி என்பது அபூர்வம். பனகல் பூங்காவில் ஏழேகால் மணிக்கு செய்திகள் ஒலிபரப்பாகும். அதன் பின்னரே

மக்கள் கலைந்து செல்வர். இரவு எட்டு மணிக்கெல்லாம் ஆள் நடமாட்டம் குறைந்து விடும். கண்ணம்மாபேட்டையில் நரிகள் உலவிய காலம். நடேசன் தெருவில் நடேச ஐயரின் வீடு மட்டுமே முதலில் வந்ததால் நடேசன் தெரு என்றே அழைக்கப்பட்டது.

### செய்தித்தாள்கள்

பாண்டி பஜார் பகுதியில் லட்சுமிகாந்தன் நடத்திய "இந்து நேசன்" என்ற பத்திரிக்கை வெகுவாக விற்பனை ஆனது. விலை இரண்டனா. அதை இரண்டனாவிற்கு வாங்கி பாரத் கேஃப் வாசலில் மீண்டும் படித்த தாள்கள் நாலணாவிற்கு விற்கப்பட்டுள்ளது.

### ரேஷன் கார்டு

பெட்ரோலுக்கும் ரேஷன் முறை இருந்தது. அளவான பெட்ரோலே அனைவருக்கும் வழங்கப்பட்டது. எனவே கார் வைத் திருப்பவர்கள் நகரின் உள்ளேயே காரை ஓட்டி உள்ளனர். பயன்படுத்தாத கூப்பன்களை மற்றவர்கள் வாங்கி பயன்படுத்தியுள்ளனர். எண்ணெய் வளம் என்பது மதிப்பறிந்து பயன்படுத்திய காலமாக விளங்கியுள்ளது. இன்றைய நிலையில் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கி பயன்படுத்தலாம். பொருளாதாரம் வெகுவாய் வளர்ந்து மேம்பட்டுள்ளது.

### கல்வி வளர்ச்சி

தி.நகரில் பள்ளிக் கூடத் தெரு என்ற பெருமைக்குரியது வெங்கட்நாராயணா சாலை. வடக்க முனையில் ஸ்ரீராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி, தெற்கே தி.நகர் பள்ளிக் கூடம், இப்போது அது தெய்வநாயகம் மேல்நிலைப்பள்ளி, அருகில் பகவந்தம் குப்தா தெருவின் குண்டூர் சுப்பையா பள்ளிக்கூடம், எதிர்வரிசையில் ஷ்ரைன் வேளாங்கண்ணி மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆக்ஸ்போர்டு பள்ளிகள், சங்கர வித்யாலயா என்ற கல்விக் கூடங்கள் நிறைந்த பகுதியாகி விட்டன. 1960-இல் அன்றைய பிரபல கணேஷ் காபித்தூள் நிலைய உரிமையாளர் ஸ்ரீமதி மாலதி பணிக்கர் தொடங்கியதே ஷ்ரைன் வேளாங்கண்ணி பள்ளிக்கூடமாகும். இவர் வேதம், உபநிஷதம் நாகரிகம் பண்பாடு போன்ற துறைகள் சார்ந்த நூல்களை மக்களுக்கு இலவசமாக வழங்கினார்.

### பொழுதுபோக்குகள்

வெங்கட்நாராயணா சாலையில் நடேசன் பூங்கா மற்றும் அதன் எதிரே விளையாட்டு மைதானமும் அமைந்து இருந்தது. இளைஞர்கள் ஓடி ஆடி விளையாடும் இடமாகவும் இயற்கை எழிலுடன் அமைந்தது. தி.நகரின் கோபதி நாராயணசாமி செட்டி சாலையில் ஜீவா பூங்காவும் அதன் எதிரில் உடற்பயிற்சி கூடமும் அமைந்திருந்தது. இராமகிருஷ்ண மிஷன் மேல்நிலை பள்ளி மைதானமும் முக்கியமான பொழுது போக்கு இடமாக விளங்கியது.

### பொருளாதார மாற்றங்கள்

1960-களில் தான் தி.நகர் ரங்கநாதன் தெருக்களில் ஆடைகள் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒரு கால கட்டத்தில் தி.நகர் கிராமமாகவே அறியப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் சிறு சிறு கடைகள் தொடங்கி பெரு நிறுவனங்களின் அடையாளமாக மாறியது. பாண்டிச்சேரியில் இருந்து வந்து தொடங்கிய வணிகக் கட்டிடத்தை பாண்டி பஜார் எனப் பெயரிட்டவர் சொக்கலிங்க முதலியார் ஆவார். உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் கட்டப்பட்டன. நகரத்திற்கு பணி நிமித்தமாக வருபவர்கள் தெரிந்தவர்கள், உறவினர்கள் இல்லத்தில் தங்கியது மாறி தங்கும் விடுதிகளில் தங்கி தம் பணிகளை மேற்கொள்ளலாயினர். பிரத்யேக ஆடையகங்கள், தையல் நிறுவனங்கள் வந்தன. நல்லி, நாயுடு ஹால், ரத்னா ஸ்டோர்ஸ், போத்தீஸ், ஆர்.எம்.கே.வி, குமரன் ஸ்டோர்ஸ், கேரளா ஹேர் டிரஸ்ஸர்ஸ், ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் போன்ற பெருவணிக நிறுவனங்களும் பெயரறியா சிறு கடைகளும் தி.நகரில் அடையாளத்தை மாற்றின. கிராமத்தை ஒரு முக்கிய வணிகத் தளமாக மாற்றின.

### பண்பாட்டுடன் கல்வி

பாரத கலாச்சார அமைப்பு திருமதி. ஒய்.ஜி.பார்த்தசாரதி அவர்களால் தொடங்கப்பட்டது. தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா தோற்றுவிக்கப்பட்டது. இந்தியில் எம்.ஏ, எம்.பில், பி.ஹெச்.டி போன்றவையும் இங்கு வழங்கப்பட்டன. தொடக்கத்தில் தியாக பிரம்ம சபா இங்கே கச்சேரிகளை நடத்தியது. கலை நிகழ்ச்சிகள் பலவும் நடைபெற்றன.

### இலக்கியமும் பதிப்பக வளர்ச்சியும்

1935 இல் மல்லிகை பதிப்பகம் வந்தது. நர்மதா பதிப்பகம், வானதி பதிப்பகம் போன்றவையும் தி.நகரில் உள்ளன. திரு.சின்ன அண்ணாமலை நடத்திய தமிழ்ப் பண்ணையில் ராஜாஜி, பெரியசாமி தூரன் மற்றும் பிற எழுத்தாளர்களும் கூடி இலக்கிய விவாதங்களில் ஈடுபட்டுள்ளனர். திரு.நா. பார்த்தசாரதியும், திரு.சாண்டில்யனும் வாணி மகால் தொடங்க ஆர்வமாய் இருந்தனர். பாவேந்தர் பாரதிதாசனும் "பாண்டியன் பரிசு" படைப்பினை திரைப்படமாக்க தி.நகர் இராமன் தெருவில் அலுவலகம் அமைத்திருந்தார். 'கவிதா, குமரன், கண்ணதாசன், திருமகள் என்று இன்று எங்கள் கடையிலிருந்து நடந்து செல்லும் தொலைவிலும் பல பதிப்பகங்கள் உள்ளன6 லிஃப்கோ லிட்டில் பிளவர் கம்பெனி 1929-ல் கிருஷ்ணஸ்வாமி சர்மா தொடங்கினார். ஆடைகள், பாத்திரக்கடைகளுக்கு இடையே இயங்கிய அறிவுக் கூடம். நூல்களை குறைந்த விலைக்கு தந்தது.

### கலை வளர்த்த சபாக்கள்

தி.நகரின் பெருமை மிகு கலை அமைப்பு ஶ்ரீகிருஷ்ண கான சபா -ஆரம்பத்தில் நிகழ்ச்சிகளை இந்தி பிரச்சார சபாவில் நடத்தியது. நாகேசுவரன் தெருவில் கூரை கொட்டகையில் சபா நிகழ்ச்சிகளை நடத்தியது. அக்காலத்தில் பிரம்பு நாற்காலிகள் குஷன் எனும் அமைப்புடன் பயன்படுத்தப்பட்டதை நல்லி குப்புசாமி செட்டியார் தம் நூலில் குறிப்பிடுகின்றார். சபாக்கள் பொழுது போக்கு இடமாக அமைக்கப்படவில்லை. பண்பாட்டின் அங்கமான இசையும் இசையின் பாயிலாக பக்தியையும் போற்றி வளர்க்கும் கூடமாகவே விளங்கியுள்ளது. ஶ்ரீதியாகப்ரம்ம கான சபா 1944-ல் ஶ்ரீசித்தூர் வி.நாகையா அவர்களால் தொடங்கப்பட்டது. மகாத்மா காந்திஜி நடந்த மண் தி.நகர். தக்கர் பாபா சமிதியை தொங்கி வைத்துள்ளார். இலாப நோக்கமற்றது

### திரைத்துறையும் தி.நகரும்

கோடா ன்றால் இந்தியில் குதிரை. குதிரைகள் அதிகம் இருந்த கோடம்பாக்கத் தில் திரைப்பணிகள் நடந்த போதிலும் திரைப் பணியாளர்கள் தி.நகரிலேயே வசித்து வந்தனர். சிவாஜி கணேசன், வியட்நாம் வீடு சுந்தரம், எம்.எம்.ஏ.சின்னப்பதேவர், ஶ்ரீதர், தியாகராஜ பாகவதர், தங்கவேலு, கவிஞர் கண்ணதாசன், நடிகை கண்ணம்மா, பானுமதி போன்றோரும் தி.நகரில் வசித்த பிரபலங்கள். மேலும், நடிகர் சித்தூர் வி.நாகையா, டி.ஆர்.ராஜகுமாரி, சாவித்திரி, வி.கே.ராமசாமி இவர்களும் தி.நகரில் வசித்து பின்னாட்களில் வேறு இடங்களுக்கு மாறிச் சென்றவர்களாவார்கள்.

### தி.நகரில் வசித்த முதலமைச்சர்கள்

மூதறிஞர் இராஜாஜி, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெ.ஜெயலலிதா, காமராஜர், ஆந்திர முதல்வர் என்.டிராமாராவ் போன்றோர் தி.நகரில் வசித்தவர்கள் ஆவார்கள். தீரர் சத்தியமூர்த்தியும் இங்கு வசித்துள்ளார்.

### குடிப்பெயர்தல்

தி.நகர் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்களின் வாழ்க்கை வசதி பெருகியதும் நங்கநல்லூர், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர் போன்ற இடங்களுக்கு சென்று வீடு கட்டி வாழத் தொடங்கினர். தி.நகர் என்பது மக்களின் வாழ்வில் அடிமட்ட நிலையில் இருந்து வாழ்வதற்கும் அடுத்தக்கட்ட வளர்ச்சியினை அடைவதற்கும் முன்னேற்றம் அடைய ஊக்கத்தையும் வைராக்கிய மன நிலையை அளித்து கொண்டேயுள்ளது அன்றும், இன்றும்.

**முடிவுரை**

பல கிராமங்கள் இணைந்து நகரமாகி, மாநகரமாக சென்னை வளர்ந்திருப்பதாக வரலாறு குறிப்பிடுவது தி.நகருக்கு மிகப் பொருந்தும். ஒரு காலத்தில் சிறு கிராமமாக இருந்த ஒரு பகுதி இன்றும் சென்னையின் இதயப்பகுதியாக திகழ்கிறது. பல மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தளமாக தி.நகர் மிளிர்கின்றது. என்றும் அதன் புகழ் ஒழி மங்குவதே இல்லை.

**பார்வை நூல்கள்**

1. நல்லி குப்புசாமி, தியாகராய நகர் அன்றும் இன்றும், சென்னை, கவிதா பப்ளிகேஷன்ஸ், 2014: (பக்.எண். 12)
2. அசோகமித்திரன், ஒரு பார்வையில் சென்னை நகரம், சென்னை, கவிதா வெளியீடு, 2002 : (பக்:9)
3. நல்லி குப்புசாமி, தியாகராய நகர் அன்றும் இன்றும், சென்னை, கவிதா பப்ளிகேஷன்ஸ், 2014: ( பக். எண் 20 )
4. மேலது, (பக்.எண் 22)
5. மேலது, (பக்.எண் - 23)
6. மேலது, (பக்.எண் 95)
7. மா.சு.சம்பந்தன், சென்னை மாநகர், சென்னை, மலர்புக்ஸ், 2023
8. ராமச்சந்திர வைத்தியநாத், சென்னப்பட்டிணம் வாழ்வும் வழியும், பாரதி புத்தகலாயம், 2023